



மாநில இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் இலவச மருத்துவம் மற்றும் கண் சிகிச்சை முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தொடங்கி வைத்தார். தி.மு.க. மருத்துவ அணி மாநில துணைச் செயலர் மருத்துவர் திலீப்குமார் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தார். இந்நிகழ்ச்சியில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர் இந்நிகழ்ச்சியில் மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் சத்தியமூர்த்தி, முன்னாள் எம்.எல்.ஏ. முருகவேல் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் வேல்முருகன் (முதுகுளத்தூர்). மருத்துவர் சுதர்சன் (ராமநாதபுரம்), முதுகுளத்தூர் பேரூராட்சி தலைவர் ஷாஜஹான், திமுக ஒன்றிய செயலாளர்கள் பூபதி மணி (முதுகுளத்தூர் கிழக்கு), கோவிந்தன் (முதுகுளத்தூர் மத்தி) ஆறுமுகவேல் (கடலாடி). குலாம் மைதீன் (சாயல்குடி கிழக்கு), ஜெயபாலன் (சாயல்குடி மேற்கு), இதம்பாடல் ஊராட்சி மன்றத்தலைவர் மங்களசாமி உள்பட முதுகுளத்தூர் சட்டமன்ற பணியாளர்கள் சத்தியேந்திரன், டோனி, ரஞ்சித் மணிகண்டன், உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு முதல்வர் தரும் சலுகைகளைப் பயன்படுத்தி மாணவிகள் முன்னேற வேண்டும்!

### சென்னை மீனாட்சி மகளிர் கல்லூரி நிறுவனர் நாள் விழாவில் –

### மாணவிகளுக்கு உதவித்தொகைகள் வழங்கி, பேராசிரியர் மா.செல்வராசன் சிறப்புரை!

சென்னை, டிச.7-

சென்னை மீனாட்சி மகளிர் கல்லூரி நிறுவனர் பேராசிரியர் கே.ஆர். சுந்தரராசன் அவர்கள் 111-வது பிறந்தநாள் விழா கல்லூரி கே.ஆர்.எசு அரங்கில் 3-12-2024 ஆம் கொண்டாடப் பட்டது. விழாவிற்குக் கல்லூரியின் தாளாளர் செயலர் மேனாள் முதல்வர் முனைவர் கே.எசு. இலட்சுமி தலைமை தாங்கினார். கலைஞர் செம்மொழித் தமிழ் விருது பெற்ற பேராசிரியர் மா.செல்வராசன் கபிலர் விருது பெற்ற முனைவர் ஆ.அமிர்த கௌரி செல்வராசன் இருவர்க்கும் பாராட்டுகள் வழங்கப்பட்டன. இறுதியாக, பேராசிரியர் மா.செல்வராசன் 85 மாணவிகளுக்கு கே.ஆர். சுந்தரராசன் நினைவு உதவித் தொகைகள் வழங்கி நிறுவனர் நாள் உரை நிகழ்த்தினார். அவரது உரை வருமாறு;

சென்னையில் உள்ள மகளிர் கல்லூரிகளுள் சிறந்த ஒரு கல்லூரியாக மீனாட்சி மகளிர் கல்லூரி மிளிர்கின்றது. நாற்பத்து ஒன்பது ஆண்டுகள் ஆனாலும் காலத்திற்கு ஏற்ற கல்வியை வழங்கிப் புதுமை மாறாமல் பொலிகின்றது. இந்தக் கல்லூரியை நிறுவிய பேராசிரியர் கே.ஆர். சுந்தரராசன் அவர்களின் 111 வது பிறந்தநாள் விழா நன்றியுடன் கொண்டாடப் படுகின்றது. கே.ஆர்.எசு. என மூன்றெழுத்துகளால் செல்லமாக அழைக்கப்பெறும் சுந்தரராசன் எளிய குடும்பத்தில் பிறந்தவர். ஆனாலும் எம்.ஏ. கணிதம் பயின்று முதன்மை பெற்றவர். எவர் துணையும் இல்லாமல் படிப்படியாக முன்னேறியவர். சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவை, ஆட்சி மன்ற உறுப்பினராகப் பல ஆண்டுகள் கல்வித் தொண்டாற்றிய வர். இந்த அனுபத்தால் ஒரு காலத்தில் ஒதுக்குப்புறமாக இருந்த கோடம்பாக்கத் தில் மகளிர் கல்லூரி ஒன்று தொடங்க விரும்பினார்.

**கலைஞரின் அரசாணை!**

அன்றைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் இவருடைய கல்வி ஆர்வத்தைப் பாராட்டி மீனாட்சி மகளிர் கல்லூரி என்னும் பெயரில் கல்வி நிலையம் தொடங்குவதற்கு 1975ஆம் ஆண்டு இசைவளித்து அரசாணை பிறப்பித்தார். உண்மையில் கலைஞர் இல்லையேல் இந்தக் கல்லூரியை அப்போது கே.ஆர். எசு தொடங்கியிருக்க முடியாது. கே.ஆர்.எசு தன்னம்பிக்கை, உழைப்பு,விடாமுயற்சி கொண்டவர். எந்தச் செயலையும் எவ்வளவு இடர் வந்தாலும் எதிர்ப்பு நேரிட்டாலும் எதிர் கொண்டு போராடி வெற்றி கண்டவர்.ஒரு போதும் சோர்வடையாத உள்ளம் கொண்டவர், நினைத்ததை நிறைவேற்றும் நெஞ்சுரம் பெற்றவர். முன்னேற விரும்பும் ஒவ்வொரு மாணவியும் இந்த மூன்றெழுத்து மனிதரை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும்.

அந்தக் காலத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிற்கே பொறியியல் கல்லூரிகள் இருந்தன.இன்றைக்கோ ஊருக்கு ஊர் பொறியியல் கல்லூரிகள் பெருகி விட்டன. அன்றைக்குப் பொறியியல் படிக்க ஆர்வம் இருந்தும் இடம் கிடைக்காதவர்கள் படிப்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் மகளிர் கல்லூரி தொடங்குவதற்குமுன் இந்தியப் பொறியியல் தொழில்நுட்பச் சுயநிதி நிறுவனம் ஒன்று தொடங்கியவர்; வெற்றிகரமாக நடத்தியவர்.

கல்லூரி தொடங்கியவர் கே.ஆர்.எசு என்றாலும் இன்று வரை கட்டி வளர்த்துக் காப்பாற்றி வருபவர் அவருடைய மகள் முனைவர் கே.எசு. இலட்சுமி அவர்கள்.தொடக்கமுதல் இருபத்தேழு ஆண்டுகள் முதல்வராகப் பணியாற்றிக் கல்லூரியை உயர்நிலைக்குக் கொண்டு வந்தவர்இப்போது தாளாளர் செயலர் ஆகப் பொறுப்பேற்றுத் திறனுடன் செயலாற்றி வருபவர்.இவருடைய கட்டுப்பாடு தான் கல்லூரியைக் காத்து நிற்கின்றது. கடமை உணர்ச்சியை மாணவிகளுக்குக் கற்பிப்பதில் கண்டிப்பாக இருப்பவர்.கண்ணியம் தவறாமல் மாணவிகள் ஒழுக வேண்டும் என்பதில் கறார் ஆனவர்.பேறறிஞர் அண்ணா சொன்ன கடமை கண்ணியம், கட்டுப்பாடு எனும் மூன்று கட்டளைகளை மந்திரங்களாக முழுமையாகப் பின்பற்றும் இந்தக் கல்லூரியை எவ்வளவு வேண்டுமானா'லும் பாராட்டலாம். வருவாய் குறைந்த குடும்பத்தில் இருந்து படிக்கவரும் மாணவிகளுக்கு ஐந்து ஆயிரம் உருபா ஆண்டுதோறும் உதவித்தொகை வழங்கும் இலட்சுமி அவர்களின் வள்ளன்மை பாராட்டுதற்கு உரியது. இந்த ஆண்டு நான்கு இலட்சம் உருபா வழங்க, எண்பத்து ஐந்து மாணவிகள் உதவித் தொகை பெறுகின்றார்கள்.

**பெண்களுக்கான சலுகைகள் – வாய்ப்புகள்!**

தமிழ்நாட்டில் மதுரையில் ஒரு கோவில் மீனாட்சி; சென்னையில் ஒரு கல்லூரி மீனாட்சி. மதுரை மீனாட்சி அழகு; சென்னை மீனாட்சி அழகுடன் அறிவு! இவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்குத் தாராளமாகத் தருகின்ற சலுகைகள் வாய்ப்புகள் பற்பல. மகளிர் சுயநிதிக் குழு, இலவசப் பேருந்துப் பயணம்,இலவசக் கல்வி,மகளிர் ஊக்கத் தொகை மாதம் ஆயிரம் ரூபா, நான் முதல்வன் திட்டம் எனப் பலவாகும். இவற்றை மாணவிகள் நன்கு பயன்படுத்திக்கொள்ள



வேண்டும். இவற்றைப் படிக்கட்டுகளாகக் கருதிநன்கு படிக்க வேண்டும்: பல துறைகளிலும் பணியேற்று முன்னேற வேண்டும்! ஒரு காலத்தில் பெண்கள் ஒதுக்கப்பட்டிருந்தார்கள்; ஒடுக்கப்பட்டிருந்தார்கள்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியதுபோல் பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே என அடிமைப்பட்டுக் கிடந்தார்கள். தந்தை பெரியார் இந்தப் பெண்ணடிமையை ஒழிக்கப் பெரிதும் பாடுபட்டார்; பேரறிஞர் அண்ணா பெண்களின் உரிமைகளை மீட்கப் போராடினார் .பார்வதி பி.ஏ; ரங்கோன் ராதா,வேலைக் காரி,குமாஸ்தாவின் மகள், கலிங்க ராணி எனப் பெண்களை முன்னிறுத்தி நாடகங்கள் புதினங்கள் தீட்டினார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் பெண்கல்வியைப் பரப்பிடப் பல கல்லூரிகள் திறந்தார்; பெற்றோர் சொத்துகளில் சம உரிமை உண்டு எனச் சட்டம் இயற்றினார்.இன்றைய முதலமைச்சர் எல்லா நிலைகளிலும் பெண்கள் பெருமைபெற வேண்டும், முதன்மை அடைய வேண்டும் என்று உதவிகளை வாரி வழங்குகின்றார். எனவே பெண்கல்வி வளர்ச்சியில இவர்களின் பெருந்தொண்டை நினைவிற் கொ ண்டு இவர்களுக்குச் செலுத்தும் நன்றியாக மாணவிகள் நன்கு கற்றுச் சிறந்து விளங்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

முன்னதாக்க கல்லூரி முதல்வர் முனைவர் மஞ்சுளா வரவேற்புரை ஆற்ற முனைவர் கவிதா கருப்பையன் அறிமுக வுரை ஆற்றினார். மாலைக் கல்லூரி முதல்வர் உட்பட ஆசிரியர்களும் மாணவர்களும் அரங்கு நிறையத் திரண்டிருந்தனர்.

### திருவொற்றியூர் கிழக்குப் பகுதி துணைச் செயலாளர்

## ஆர்.எஸ்.சம்பத் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.7-

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி துணைச் செயலாளர் ஆர்.எஸ்.சம்பத், நேற்று முன்தினம் (5.12.2024 வியாழக்கிழமை) காலை 6.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 63.

மறைந்த ஆர்.எஸ்.சம்பத்துக்கு எழிலரசி எனும் மனைவியும், எஸ்.தினேஷ் குமார் எனும் மகனும், எஸ்.நர்மதா எனும் மகளும் உள்ளார்கள்.

கழக முன்னோடி ஆர்.எஸ்.சம்பத், 50 ஆண்டு கால கழகத் தோழர் ஆவார். இளைஞர் அணியின் வட்ட அமைப்பாளராகவும் 'இளைய சூரியன்' வார இதழின் முகவராகவும் இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றனர்.

கொண்ட கொள்கையிலிருந்து கிஞ்சிற்றும் வழுவாத கழக முன்னோடியான ஆர்.எஸ்.சம்பத் மறைவுற்ற செய்தியறிந்து கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருந்தினார்.

அன்னாரின் துணைவியார் திருமதி எழிலரசி உள்ளிட்ட குடும்பத்தினருக்கு ஆறுதலையும், அன்னாரின் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.





சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் தமிழக துணை முதல்வர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இலவச பொது மருத்துவ முகாம் திருவொற்றியூர் மேற்கு பகுதி 5வது வட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சாய் மஹாலில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திருவொற்றியூர் ஆர்.டி.மதன் குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது. முகாமை மாநிலக் கழக மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி. சங்கர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் 5வது வட்டகழக செயலாளர் 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் வரவேற்றார். இதில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர், தி.மு.தனியரசு, மாவட்ட அவைத்தலைவர் குறிச்சி எஸ்.கணேசன், வை.ம. அருள்தாசன் மற்றும் தொகுதி பொறுப்பாளர் ஆரம்பாக்கம் கே.ஆறுமுகம், கேபிள்.த.கனேசன், டி.ஜி.ஆர். மணிவண்ணன், சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், ஜி.கே.இனியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதில் 300க்கும் மேற்பட்ட நபர்களுக்கு பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டு மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

### இந்தியாவின் பொருளாதாரம் – வளர்ச்சிக்கு தமிழ்நாடு குறிப்பிடத்தக்க பங்களிப்பு!

## தமிழ்நாட்டிற்கு நியாயமான நிதிப் பங்களிப்பை ஒன்றிய அரசு வழங்க வேண்டும்!

### மாநிலங்களவையில் – பி.வில்சன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.7-

நாடாளுமன்ற மாநிலங்களவையில் நேற்று பேசிய கழக உறுப்பினர் பி.வில்சன், "தமிழ்நாடு நீண்ட காலமாக இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி முன்னேற்றத்தின் கலங்கரை விளக்கமாக இருந்து வருகிறது.

ஆயினும்கூட, மாநிலத்திற்கு உரிமையான நிதியினையும் மற்றும் ஆதரவையும் திட்டமிட்டு மறுப்பது மாநிலத்தின் நிதிநிலையை பெரிதும் பாதிக்கிறது.

எனவே, இப்பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணும் வகையில், தமிழ்நாட்டிற்கு நியாயமான நிதிப்பங்களிப்பையும் ஆதரவையும் வழங்குமாறு துணைத்தலைவர் அவர்கள்வாயிலாக ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

மாநிலங்களவையில் பி.வில்சன் பேசியதாவது :-



ஒன்றிய அரசினால் புறக்கணிப்பையும், ஏற்றத்தாழ்வையும் தமிழ்நாடு தொடர்ந்து சந்தித்து வருவதால், பல்வேறு உள்கட்டமைப்புப் பணிகள் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள் முடங்கியுள்ளன.

புதிய ஜிஎஸ்டி நடைமுறையின் கீழ் வாக்குறுதியளிக்கப் பட்ட இழப்பீட்டு பொறிமுறை, 2022ல் ஒன்றிய அரசால் திடீரென நிறுத்தப்பட்டது. இதன் விளைவாக தமிழ்நாட்டிற்கு ஆண்டுக்கு ரூ.20,000 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டது. செஸ் மற்றும் கூடுதல் கட்டண வரிகளை ஒன்றிய அரசு அதிக அளவில் சார்ந்திருக்கும் போக்கானது, பகிர்ந்தளிக்கக்கூடிய வரிகளில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு கிடைப்பதை கடுமையாக கட்டுப்படுத்தியுள்ளது. 202223 நிதியாண்டில், ஒன்றிய அரசு செஸ் மற்றும் கூடுதல் கட்டணங்கள் மூலம் 5.1 லட்சம் கோடியை வசூலித்தது. இந்த வசூல் பங்கீடு செய்யக்கூடிய தொகுப்பில் சேர்க்கப்பட்டிருந்தால், தமிழகத்திற்கு ஒரு வருடத்தில் கூடுதலாக ரூ.20,800 கோடி கிடைத்திருக்கும். மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 3 சதவீதம் உச்சவரம்பு என்பது போன்ற மாநிலங்கள் கடன் பெறும் திறனுக்கான நியாயமற்ற வரம்புகள், கடந்த நான்கு ஆண்டுகளில் கடன் வாங்குவதில் 8,500 கோடி இழப்புக்கு வழி வகுத்துள்ளன. இது முக்கிய பொது உள்கட்டமைப்பு மற்றும் நலத்திட்டங்களுக்கு நிதியளிக்கும் தமிழ்நாட்டின் திறனை பாதிக்கிறது. 202324 ஆம் ஆண்டுக்கான ஒன்றிய பட்ஜெட்டில், வெறும் 2.5% மட்டுமே தமிழகத்திற்கு ஒதுக்கப் பட்டது, இது போதுமானதல்ல. ஒன்றிய அரசால் நிதியளிக்கப்படும் திட்டங்களுக்கான சுமையை மாநில அரசின் மீது ஒன்றிய அரசு படிப்படியாக மாற்றி வருகிறது .

அதற்கு மிகச்சிறந்த உதாரணம் கூற வேண்டுமென்றால், மலிவு விலை வீடுகள் திட்டத்தில் (*Affordable Housing in Partnership*) ஒன்றிய அரசு ஒரு வீட்டிற்கு ரூ.1.5 லட்சமும், தமிழக அரசு ரூ.1214 லட்சமும் பங்களிக்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில், தமிழ்நாட்டில் ரயில்வே திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடு என்பது உத்தரபிரதேசத்திற்கான ஒரு வருட ரயில்வே பட்ஜெட் ஒதுக்கீட்டிற்கு சமமானதாக உள்ளது. போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததால் பல்வேறு முக்கிய ரயில்வே திட்டங்கள் முடங்கியுள்ளன.

தமிழ்நாட்டிற்கு கடந்த 10 ஆண்டுகளாக நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் எதற்கும் ஒப்புதல் அளிக்கப்படவில்லை.

ராமேசுவரத்தை முக்கியச் சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் திட்டத்திற்கு ரூ.99 கோடி, மாமல்லபுரம் கடற்கரை கோயில் நந்தவனம் அமைக்கும் திட்டத்திற்கு ரூ.30 கோடி, நீலகிரி மாவட்டம் பைக்காராவில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்தும் திட்டத்துக்கு 28.3 கோடி உள்ளிட்ட தமிழகத்தில் பல்வேறு சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களுக்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் ஒன்றிய அரசின் உடனடி கவனம் இதற்கு தேவைப்படுகிறது.

மேலும், பரந்தூர் விமான நிலையம், ஓசூர் விமான நிலையம், கிரீன்ஃபீல்ட் கடலூர் துறைமுகம், கோவை, மதுரை மற்றும் ஓசூர் மெட்ரோ திட்டங்கள், கோவை, திருச்சி, மதுரை மற்றும் தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கப் பணிகளுக்கு ஒப்புதல் மற்றும் பணிகளை ஒன்றிய அரசு விரைவுபடுத்த வேண்டும்.

தமிழ்நாடு நீண்ட காலமாக இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி முன்னேற்றத்தின் கலங்கரை விளக்கமாக இருந்து வருகிறது.

ஆயினும்கூட, மாநிலத்திற்கு உரிமையான நிதியினையும் மற்றும் ஆதரவையும் திட்டமிட்டு மறுப்பது மாநிலத்தின் நிதிநிலையை பெரிதும் பாதிக்கிறது.

எனவே, இப்பிரச்சினைகளுக்கு உடனடியாகத்தீர்வு காணும் வகையில், தமிழ்நாட்டிற்கு நியாயமான நிதிப்பங்களிப்பையும் ஆதரவையும் வழங்குமாறு துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பி.வில்சன் குறிப்பிட்டார்.

## சென்னை வடகிழக்கு மாவட்ட பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர்க் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (07.12.2024 - சனிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் மாதவரம் V.R.D நகரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில் எனது சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற உள்ளது.

மேற்படி இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 14.12.2024 சனிக்கிழமை அன்று மாதவரம் ஜி.என்.டி ரோட்டில் அமைந்துள்ள புனித அன்னாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெறவிருக்கும் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம், கழக ஆக்கப் பணிகள்

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**

செயலாளர், வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ந. சண்முகம்

### டிசம்பர் 7 (2021)



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தொண்டர் படையில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**பல ஆண்டுகள் தொடர்ந்து கிளைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.**

**திருநரையூர் ஊராட்சி மன்றத் தலைவர், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சித்தமல்லி ந.சோமசுந்தரம்

### டிசம்பர் 7 (2022)



**இளமைப் பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து பணியாற்றி, கழகம் துவங்கியவுடன், அதில் தன்னை இணைத்துக் கொண்டு சித்தமல்லி கிளைக் கழக அமைப்பை முதன்முதலாக உருவாக்கி, அதன் செயலாளராக பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**கிளைச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட அவைத்தலைவர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**1967, 1971 ஆகிய இரு முறை கழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். பல்வேறு கூட்டுறவு சங்கம் மற்றும் அறங்காவலர் குழு தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட பல போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**